# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## க.பொ.த உயர்தர மாதிரிப் பரீட்சை 1 - 2020


## கிறிஸ்தவநாகரிகம்

சுட்டெண் : ……………  நேரம் : 2.00 மணித்தியாலம்

01. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
   **A** – பருப்பொருள் சார்ந்தது
   **B** – தேர்ந்திறன் பொருளுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது
   **C** – ஆன்மீகத்தன்மையை வலியுறுத்துகின்றது
   **D** – பாரம்பரிய வாழ்க்கை முறையைக் காட்டுகின்றது

   மேற்கூறப்பட்ட கூற்றுக்களில் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைக் குறிப்பிடுவது
   1) AD - BC  2) BC – AD  3) AB – CD  4) CD – AB  5) AC – BD

02. யூதநாகரிகம் கிறிஸ்தவத்தில் ஏற்படுத்திய செல்வாக்கைக் குறிப்பிடும் சரியான கூற்று
   1) ஆட்சி நிர்வாக முறை
   2) உடன்படிக்கை வாழ்வு
   3) விவசாய நடைமுறைகள்
   4) தீய ஆவியை விரட்டுதல்
   5) மனித மீட்புக்குத் தெய்வங்களின் துணை அவசியம்

03. மனித ஆன்மா இவ்வுலகைச் சார்ந்ததல்ல, இவ் ஆன்மா என்பது இறைவனிடமிருந்து பறந்த சிறுபொறியே இக்கருத்துக்களைக் குறிப்பிடும் கிரேக்க மெய்யியல் சிந்தனை
   1) நொஸ்திக்கம், ஸ்தொயிக்கம்
   2) ஸ்தொயிக்கம், நொஸ்திக்கம்
   3) பிளற்றோனிசம், எப்பிக்கூரியனிசம்
   4) நொஸ்திக்கம், பிளற்றோனிசம்
   5) ஸ்தொயிக்கம், பிளற்றோனிசம்

04. திருச்சபையில் பொதுமக்களின் பங்கும் செயற்பாடும் முற்றாக அற்ற நிலை நிலவியபோது இவ்வாறான அமைப்புநிலை வேறுபாட்டை மாற்றியமைக்க பரிந்துரைத்த சங்கம்
   1) எருசலேம் சங்கம்
   2) திரிதெந்து சங்கம்
   3) நிசெயா சங்கம்
   4) முதலாம் வத்திக்கான் சங்கம்
   5) இரண்டாம் வத்திக்கான் சங்கம்

05. இஸ்ரயேல் எனும் பெயரில் அழைக்கப்பட்டு வந்த “பலஸ்தீனம்” புராதன காலத்தில் எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?
   1) சமாரியா
   2) புனித நாடு
   3) கப்பர்நகூம்
   4) கானான்
   5) அசீரியா

06. பலஸ்தீனாவின் தென்பகுதியில் ஏதோம் பாலைநிலத்தில் வாழும் மக்கள்
   1) பிலிஸ்தியர்
   2) மக்கபேயர்
   3) மோவாபியர்
   4) பெனிசியர்
   5) இதுமேயர்

07. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

**A** - பலஸ்தீனாவின் கிழக்குப் பகுதியில் யோர்தான் மலைத்தொடர் அமைந்துள்ளது

**B** - பாசானுக்கும் மோவாபுக்கும் இடையே கிலயாது அமைந்துள்ளது

**C** - யோர்தான் நதிக்கு கிழக்கே ஏதோம் அமைந்துள்ளது

**D** - கெதரோன் பள்ளத்தாக்கிற்கு கிழக்கே ஒலிவமலை அமைந்துள்ளது

**E** - எஸ்திரலோன் சமவெளியின் ஒரு மூலையில் கானா அமைந்துள்ளது

இவற்றுள் சரியான கூற்றுக்களாவன

1) ABC 2) ACE 3) BCD 4) ABD 5) CDE

08. இஸ்ரயேல் இனத்தைப் போன்று இவர்களும் செமித்திய இனக் கலப்பைச் சேர்ந்தவர்களே. இக்கூற்றால் குறிப்பிடப்படுபவர்கள்

1) கனானேயர் 2) சமாரியர் 3) கிக்கோஸ்
4) இதுமேயர் 5) பரிசேயர்

09. சூரியக்கடவுளாகத் தன்னைப் பிரகடனப்படுத்தி, தன்னைத் தவிர வேறு எவரையும் வணங்கக் கூடாது என;W கொள்கையை முன்வைத்தவர்

1) தொமிசியன் 2) பாரவோன் 3) நீரோ 4) ஏரோது 5) சாலமோன்

10. இஸ்ரயேல் மக்கள் மிதியானியர் வசம் ஏழு ஆண்டுகள் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டபோது அவர்களை மீட்டவர்

1) கிதியோன் 2) சிம்சோன் 3) ஒத்னியேல் 4) தெபோறா 5) யோசுவா

11. எகிப்திய நாகரிகம் யூதநாகரிகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களில் ஒன்றாகக் கருதக் கூடியது

1) உடன்படிக்கையின் மூலம் இஸ்ரயேலர் இறைமக்களாக உருவாக்கப்பட்டமை
2) எபிரேய விவிலியம் மொழிபெயர்ப்புக்குள்ளாக்கப்பட்டமை
3) சாலமோன் அரசன் யாவேயை மறந்து அந்நிய தெய்வங்களை வழிபட்டமை
4) தாவீது சாலமோனை அரசானாக்கி, தந்தைக்குப் பின் மகன் ஆட்சிக்கு வரும் முறைமையை உருவாக்கியமை
5) எகிப்து முக்கிய தளமாக விளங்கியதைப் போன்று எருசலேமை ஆன்மீக மையமாக உருவாக்கியமை

12. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

**A** - மலைப்பொழிவு

**B** - திருத்தூதுரை

**C** - உவமைகள்

**D** - புதுமைகள்

**E** - நிறைவுக்காலம்

இவற்றுள் மத்தேயு இறையரசின் அறிவிப்பை அறிவுரைகளாகக் குறிப்பிடுவதில் அடங்காதது

1) B 2) E 3) D 4) C 5) A

13. பின்வரும் கூற்றுக்களில் புளியாத அப்பத்திருவிழாவுடன் பொருந்தாதது

1) இவ்விழா அறுவடையின் தொடர்புடையதாகும்
2) பாஸ்கா விழாவின் பின் ஏழுவாரங்கள் கழிந்து மறுநாள் கொண்டாடப்படும்
3) ஆடுமாடுகளின் தலையீற்றுக்களைக் கடவுளுக்கு காணிக்கையாக்குவர்
4) இவ்விழா எபிரேய மொழியில் மசொத் என்று அழைக்கப்படுகின்றது
5) தமது விளைநிலங்களில் முதல் ஏழுநாட்களில் அறுவடை செய்த தானியங்களை காணிக்கைப் பலியாக்குவர்

14. **A** - **நீதிக்கும் நேர்மைக்கும் அன்பிற்கும் ஆதரவிற்கும் பெயர் போனவர்**

**B** - **சர்வதிகாரியாக மாறி கொடூரத்திற்கும் அக்கிரமத்திற்கும் பெயர் போனவர்**

**C** - **தந்தையின் எல்லாத் தீயகுணங்களையும் கொண்டவர்**

**இக்கூற்றுக்களால் குறிப்பிடப்படும் நபர்கள் முறையே**

1) பெரிய ஏரோது, அர்க்கெலா, ஏரோது அந்திப்பா
2) அர்க்கெலா, பிலிப்பு, ஏரோது அந்திப்பா
3) பெரிய ஏரோது, ஏரோது அந்திப்பா, ஏரோது அகிரிப்பா
4) கொன்ந்தாந்தின், கலேரியு, மாக்சிமியன்
5) பெரிய ஏரோது, பிலிப்பு, ஏரோது அந்திப்பா

15. **யூதேயாவின் உண்மையான அரசாங்கமாக இருந்து ஆளும் அதிகாரிகளுக்கு முன் யூதமக்களின் யூதமக்களின் பிரதிநிதிகளாகச் செயற்படுபவர்கள்**

1) தலைமைக்குருக்கள் 2) அரசர்கள் 3) ஆளுநர்கள்
4) படைவீர்கள் 5) வரிதண்டுவோர்

16. **கி.மு. 722இல் இஸ்ரயேலரை நாடுகடத்தி அந்த வெற்றிடத்தில் பிறஇனத்தவர்களைக் குடியமர்த்தியவர்**

1) நெபுகத்னேசர் 2) எத்கிளார் பலசார் 3) யோயாக்கீம்
4) எரோபவாம் 5) ஏரோது அகிரிப்பா

17. **தூய பவுல் உரோமையர் திருமடலில் இவர்களுக்குப் பணியாற்றுவதைத் தனக்குக் கிடைத்த பெருமை யாகக் கருதுகின்றார். இவ்வாறு குறிப்பிடப்படுபவர்**

1) இஸ்ரயேல் மக்களுக்கு 2) சிதறி வாழ்ந்த யூதர்களுக்கு
3) பிறவினத்தாருக்கு 4) தாழ்த்தப்பட்டோருக்கு
5) பலஸ்தீன யூதர்களுக்கு

18. **ஏல் எலோகிம் என்பதால் உணர்த்தப்படும் இறைவனின் தனித்துவமான பண்பாவது**

1) படைத்தவரான கடவுள் 2) உடன்படிக்கையின் இறைவன்
3) என் ஆண்டவர் 4) மாட்சியில் உள்ளவர்
5) முதலும் முடிவுமற்ற இறைவன்

19. **பின்வரும் கூற்றுக்களைக் கருதுக**

**A** – **பேச்சு மேடையில் இறைவார்த்தை வாசிக்கப்படும்**

**B** - **எருசலேம் ஆலய வழிபாடுகள் மேற்பார்வை செய்யப்பட்டன**

**C** – **பலிப்பீடம் இல்லை**

**D** – **மறைப்பாடசாலையாகவும் பயன்பட்டது**

**இவற்றுள் செனத்திரின் சங்கத்துடன் தொடர்புடைய விடயங்களாவன**

1) ABC 2) BCD 3) ACD 4) ABD 5) ABCD

20. **"மனிதனின் தண்டனையோ மீட்போ கடவுளின் கைகளிலேயே தங்கியுள்ளன" என்பதை நம்பிக்கை யாகக் கொண்டவர்கள்.**

1) மறைநூல் அறிஞர் ஆவர்
2) சதுசேயர் ஆவர்
3) எசீனியர் ஆவர்
4) தீவிரவாதிகள் ஆவர்
5) பரிசேயர் ஆவர்

21. **பின்வரும் கூற்றுக்களுள் பாஸ்காவிழாவுடன் தொடர்பானது**

**A** - **மசொத்**

**B** - **சுக்கோத்**

**C** - **ஹனுக்கா**

**D** - **யோம் கிப்பூர்**

**இவற்றுள் பாவக்கழுவாய் பலி விழாவுடன் தொடர்புடைய சொல்.'.சொற்கள்**

1) A 2) B 3) C 4) D 5) AD

22. **ஒரு பெரிய மரத்தை நாடிப் பறவைகள் வந்து தங்குவது போல அதில் பலரும் பங்குகொள்வார்கள். பயனடைவார்கள் என இறையாட்சியை விளக்கி நிற்கும் உவமையாவது**
1) திருமணவிருந்து உவமையின் மூலம்
2) புதையல் பற்றிய உவமையின் மூலம்
3) வலை பற்றிய உவமையின் மூலம்
4) புளிப்புமா பற்றிய உவமையின் மூலம்
5) கடுகுவிதை பற்றிய உவமையின் மூலம்

23. **"கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே" எண்ணினார். சீடத்துவம் தொடர்பான இக்கருத்துடன் தொடர்புடையவர்**
1) யோவான்
2) தோமா
3) பேதுரு
4) பவுல்
5) யாக்கோபு

24. **இயேசுவின் விலாவை ஈட்டியால் குத்தியபோது இரத்தமும் தண்ணீரும் வழிந்தோடியதன் மூலம் கருதப்படுவது**
1) இயேசுவின் வேதனைக்குரிய மரணம் பற்றியதாகும்
2) மீட்புப்பணி முற்றுப் பெறுவதும் தூயஆவி வழங்கப்படுவதுமாகும்
3) இயேசுவின் உயிரை அழிக்க இருந்த தேவையாகும்
4) ஈட்டியால் குத்திய படைவீரனின் கண்கள் குணமடைந்தமையாகும்
5) இயேசுவின் வேதனைக்குரிய மரணத்தின் இறுதிக்கட்டம் நெருங்கிவிட்டமையாகும்

25. **எருசலேம் சங்கம் கூட்டப்பட்டபோது திருத்தூதர்களின் பொது ஒன்று கூடலில் பேதுருவின் அனுபவப் பகிர்வு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அவ்விதம் பகிரப்பட்ட அனுபவமானது**
1) யோவேலின் இறைவாக்கு நிறைவேறியதைப் பகிரந்து கொண்டமை
2) கிறிஸ்துவின் உயிர்ப்பிற்கு நாங்கள் சாட்சிகள் என உரையாற்றியமை
3) யோப்பா அனுபவத்தையும், கொர்ணேலியுவின் திருமுழுக்கு அனுபவத்தையும் பகிர்ந்தமை
4) பெந்தக்கோஸ்தே அனுபவத்தையும், பிறவிமுடவனைக் குணமாக்கிய அனுபவத்தையும் பகிர்ந்தமை
5) ஆமோஸ் இறைவாக்கினரின் புறவினத்தவர்கள் மீட்புப் பெறுவர் என்றுரைத்த அனுபவத்தைப் பகிர்ந்தமை

26. **கணவனுக்கும் மனைவிக்குமிடையேயுள்ள உறவை கிறிஸ்துவிற்கும் திருச்சபைக்குமிடையிலான உறவிற்கு ஒப்பிட்டுத் தூய பவுல் எந்த சபையினருக்கு முன்வைத்தார்?**
1) கொரிந்திய சபையினருக்கு
2) பிலிப்பிய சபையினருக்கு
3) எபேசிய சபையினருக்கு
4) கலாத்திய சபையினருக்கு
5) உரோமைய சபையினருக்கு

27. **இறைவன் கருணையோடு வழங்கும் இலவசக்கொடைகள் என்ற பொருளைத் தரும் கிரேக்க சொல்**
1) கெனோசிஸ் 2) நெயுமா 3) அகாபே 4) காரிஸ்மா 5) காரிஸ்

28. **கிறிஸ்துவின் தாழ்ச்சி பற்றிக் கூறும் திருமடல்**

1) கொரிந்தியர் மடல் 2) எபேசியர் மடல் 3) கலாத்தியர் மடல்
4) பிலமோன் மடல் 5) பிலிப்பியர் மடல்

29. **மிலான் சாசனத்தால் தடைசெய்யப்பட்ட விடயங்களாவன**

**A - சிலுவையில் அறைந்து கொல்லுதல்**
**B - பலவீனமான சிசுக்களை கொன்றுவிடுதல்**
**C - ஆயர்களின் அதிகாரம்**
**D - அடிமைகள் கொடுமைப்படுத்தப்படல்**
**E - பறிமுதல் செய்த சொத்துக்கள் மீண்டும் கொடுக்கப்படல்**

1. ABD 2) ABE 3) BCD 4) CDE 5) ACD

30. **ஆரியவாதத்தின் தொடர்ச்சியாகவும், கொன்தாந்துநோபிளின் ஆயரால் முன்வைக்கப்பட்டு, கி.பி. 381இல் கொன்ந்தாந்துநோபிள் பொதுச்சக்கத்தில் கண்டனம் செய்யப்பட்ட தப்பறை**

1) நெஸ்தோரியவாதம்
2) மசதோனியவாதம்
3) இயுத்திக்கேயவாதம்
4) மனிக்கேயவாதம்
5) தோனாத்தியவாதம்

31. **பவுலின் தமது மறையுரைகளில் கிரேக்க தாக்கத்தை காணமுடிகிறது. அந்தவகையில் “நாம் அவருடைய பிள்ளைகள்” என்ற கிரேக்க இலக்கியவாதியான ------------------ சிந்தனையைப் பயன்படுத்தி உரையாற்றிய இடம்**

1) அரிஸ்டோட்டலின் - அந்தியோக்கியா
2) பிளேற்றோவின் - லிஸ்திரா
3) அகுஸ்தினாரின் - கொரிந்து
4) அரட்டசின் - எதென்ஸ்
5) அக்குவினாரின் - பிலிப்பி

32. **விஞ்ஞானமரபும், மதத் தத்துவ விடயங்களில் ஆர்வமும் கொண்ட கல்வியறிவுள்ள மேற்தர வகுப்பினரைக் கொண்ட எகிப்தின் தலைநகர்**

1) அந்தியோக்கியா 2) உரோமை
3) அலெக்ஸ்சாந்திரியா 4) எதென்ஸ்
5) கொரிந்து

33. **பின்வரும் கூற்றுக்களைக் கருதுக**

**A - கீழைத்தேய துறவறத்தின் தந்தை**
**B - முதல் துறவி இறையியலாளர்**
**C - உலகின் ஒளி**
**D - உண்மையான துறவறமடம் கிறிஸ்தவ வாழ்வின் மையம் என்ற பார்வை**
**E - மேல்நாடுகளில் துறவறவாழ்வை அறிமுகம் செய்தல்**

**இக்கூற்றுக்களில் புனித பசில் தொடர்பான தவறான கூற்று**

1) A 2) B 3) C 4) D 5) E

34. **கொன்ந்தாந்துநோபிள் பிதாப்பிதாவான மைக்கல் செலாரியுஸ் திருப்பலியில் திருத்தந்தையின் பெயர் சொல்லி மன்றாடுவதை நீக்கி, திருத்தந்தையைப் போலத் தானும் சரிநிகர் என்று எந்தத் திருத்தந்தை யின் காலத்தில் உரிமை கோரினார்**

1) திருத்தந்தை 6ம் பவுல் 2) திருத்தந்தை 9ம் லியோ
3) திருத்தந்தை 12ம் பயஸ் 4) திருத்தந்தை 10ம் பயஸ்
5) திருத்தந்தை 13ம் லியோ

**35. சிலுவைப் போர்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.**

**A - புனித நாட்டினை விடுவிக்க நிகழ்த்தப்பட்டது**

**B - துருக்கியரிடமிருந்து திருச்சிலுவையினை மீட்க நிகழ்த்தப்பட்டது**

**C - எட்டு சிலுவைப்போர்கள் நிகழ்ந்தன**

**D - ஐரோப்பியர்கள் சிலுவைப்போரில் ஈடுபட மறுத்தார்கள்**

**E - இப்போர் 105 வருடங்கள் நடைபெற்றன**

**இவற்றுள் சரியான கூற்றுக்கள் யாவை?**

1) ABC 2) BCD 3) ACD 4) ACE 5) CDE

**36. திருவிவிலியத்தை இலத்தீன் மொழியில் மொழிபெயர்ப்பதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்**

1) திருத்தந்தை பொனிபஸ்
2) திருத்தந்தை பெனடிற்
3) திருத்தந்தை தமாஸ்கஸ்
4) திருத்தந்தை ஜெரோம்
5) திருத்தந்தை 11ஆம் கிரகோரி

**37) பின்வருவனற்றுள் பெனடிற் சபையினர் தொடர்பான தவறான கூற்று**

1) செபமும் வேலையும்
2) விவிலியமும் இலத்தீன் மொழியும் இலக்கியமும் கற்பித்தமை
3) மடங்களை அண்மித்து பாடசாலைகளை உருவாக்கியமை
4) பாடநூல்களைக் கையெழுத்தினால் பிரதியெடுத்தல்
5) மடத்தின் ஒதுங்கிய சிறு அறைகளில் செபித்தமை

**38. கோதிக்கட்டடக்கலைப் பாணியில் அமைந்த பேராலயம்**

1) உரோம், புனித பேதுருவானவர் பேராலயம்
2) உரோம், லத்தரன் பேராலயம்
3) லண்டன் வெஸ்மினிஸ்ரர் பேராலயம்
4) பரீஸ் நோத்திரடாம் பேராலயம்
5) கொழும்பு புனித லூசியா பேராலயம்

**39. மத்திய காலத்தில் மக்களின் ஆன்மீக வாழ்வில் தளர்ச்சிநிலை ஏற்படக் காரணம்**

1) திருச்சபைத் தலைவர்கள் சிலுவைப் போரில் அதிககவனம் செலுத்தியமை
2) கல்வி அறிவில்லாத மக்களுக்கு குருகுலத்தவர்கள் மறையைப் போதிக்கத் தவறியமை
3) குருக்கள் பணம் சொத்துக்களைத் திரட்டுவதில் அதிக கவனம் செலுத்தியமை
4) குருக்களில் சிலர் திருச்சபைக்கு எதிராக மக்களைத் தூண்டியமை
5) ஆட்சியாளர்கள் திருச்சபையின் நிர்வாகத்தில் தலையிட்டமை

**40. முதன் முதலாக அடிமைகளின் உரிமையைப் பற்றிப் போதித்தவர்**

1) சார்ள்ஸ் வெஸ்லி
2) தோமஸ் முன்ற்சர்
3) ஜோன் கல்வின்
4) ஜோண் வெஸ்லி
5) சுவிங்லி

**41. பின்வருவனற்றுள் புனித அகுஸ்தினார் பற்றிய தவறான கூற்று யாது?**

1) இலத்தின் மரபுத் திருச்சபையில் மிகவும் திறமையான தந்தையாவார்
2) வாழ்க்கை அறிக்கை என்னும் நூலில் தனது இளம் பருவம் பற்றி எழுதியுள்ளார்
3) வாழ்வின் ஒரு நிலையில் மனிக்கேயவாதத்தைப் பின்பற்றியவர்
4) தூய திரித்துவம் பற்றி அதிக விடயங்களை எழுதியுள்ளார்
5) கிரேக்க மெய்யியலுக்கு எதிராகப் பல நூல்களை எழுதினார்

**42. கசியோடோறஸ் என்பவர் தொடர்பான சரியான கூற்று**

1) ஐரோப்பிய நாடுகளில் இருந்து பேரறிஞர்களையும் கல்விமான்களையும் வரவழைத்து அறிவியல் மன்றத்தை ஏற்படுத்தினார்
2) கப்புச்சின் சபைக்கு தலைமை தாங்கினார்
3) இவரது ஆன்மீக நூல்களுள் ஆன்மீகப்பாடல் எனும் நூல் முதன்மையானது
4) விவியர்ஸ்ஸில் இருந்த ஒரு மடத்தைப் பங்குப்பாடசாலையாக மாற்றி கற்றல் நடிவடிக்கைகளை முன்னெடுத்தார்
5) இலத்தீன் திருச்சபைத் தந்தையர்களில் சிறப்புமிக்கவராகவும், இறையியலின் மறைவல்லுனராகவும் விளங்கினார்

**43. கி.பி. 1054இல் கீழைத்தேய திருச்சபை கத்தோலிக்க திருச்சபையிலிருந்து பிரிந்து கிரேக்க ஓத்தடொக்ஸ் சபையை உருவாக்கக் காரணம்**

1) ஒரே திருச்சபை என்னும் இறைசிந்தனையைப் புறக்கணித்தல்
2) அடையாளங்களை மறுத்தல் ஒரே திருச்சபை என்னும் இறைசிந்தனையைப் புறக்கணித்தல்
3) திருவிவிலிய படிப்பினைகளை மறுத்தல்
4) பூரண பலன்களைப் புறக்கணித்தல்
5) திருப்பலி, திருச்சபைப் பாரம்பரியத்தைப் புறக்கணித்தல்

**44. A - கடவுளின் தன்மை அனைத்தும் இறைவனிடமிருந்தே தோற்றம் பெறுகின்றன**
**B - சிந்தனை ஆற்றலுள்ள மானிடர்கள் கடவுளிடமே இறுதியில் சங்கமம் ஆகின்றனர்**
**C - சிந்தனை ஆற்றலுள்ள மானிடர்களுக்கு இயேசுவே வழியாகவுள்ளார்**
**ஆகிய விசுவாசம், அறநெறி பற்றிய திருச்சபையின் படிப்பினைகளை சிறப்பாகக் கொண்டுள்ள நூல்**

1) தன்னிலை ஏற்பு 2) சும்மா தியலோஜிஏ 3) சும்மா கொன்த்ரா ஜென்திலேஸ்
4) இறைவனின் நகரம் 5) மூவொரு இறைவன்

**45. கிறிஸ்தவம் யூத எல்லைகளுக்கு வெளியே தோன்றிய கலாசாரத்தில் வளர்வதற்கு வழிவகுத்த சங்கம்**

1) நிசெயா சங்கம் 2) திரிதெந்தீன் சங்கம்
3) எருசலேம் சங்கம் 4) முதலாம் வத்திக்கான் சங்கம்
5) இரண்டாம் வத்திக்கான் சங்கம்

**46.**
**A - பற்றிக் E - கோபத்தின் நாள்**
**B - ஜோண் பனியன் F - இழந்த இன்பவனம்**
**C - செலானா தோமஸ் G - மார்புக்கவசம்**
**D - ஜோண்மில்ரன் H - யாத்திரிகனின் பயணம்**
**மேலே குறிப்பிடப்பட்ட நபர்களுக்குரிய நூல்களைக் கொண்ட சரியான விடைத்தொகுதி**

1) GHEF 2) EFG 3) FGHE 4) HGFE 5) FEHG

**47. மத்தேயு ரிச்சி அடிகளார் பற்றிய சரியான கூற்றுக்களைத் தெரிவு செய்க**
**A - பிரான்ஸ்நாட்டவர்**
**B - இயேசுசபைக் குருவானவர்**
**C - தேசிய பண்பாட்டினை மதித்தவர்**
**D - எம்மதத்தின் முக்கிய கட்டளைகள் என்ற நூலை எழுதியவர்**
**E - வானசாஸ்திரத்தில் பிரசித்தி பெற்றவர்**

1) ABC 2) ACD 3) BDE 4) BDE 5) BCE

**48. பிரித்தானியர் காலத்தில் வெளியிடப்பட்டட இரண்டு தமிழ் பத்திரிகைகள்**

1) பாதுகாவலன், ஞானப்பள்ளு 2) உதயதாரகை, மன்னா
3) பாதுகாவலன், நாலுவேதம் 4) உதயதாரகை, பாதுகாவலன்
5) யாகப்பர் அம்மானை, நாலுவேதம்

**49. இரண்டாம் ஜோன் பவுலினால் வெளியிடப்பட்ட சமுதாயப் படிப்பினை ஏடுகளாவன**

1) தொழிலாளர் நிலைமை, மனித உழைப்பு, அன்பே கடவுள்
2) மனிதரின் மீட்பர், மனித உழைப்பு, நூறாவது ஆண்டு
3) சமூக ஒழுங்கமைப்பு, அவனியில் அமைதி, அன்னையும் ஆசிரியையும்
4) மக்களின் முன்னேற்றம், அவனியில் அமைதி, இறைவனுக்கே புகழ்
5) அன்பே கடவுள், தொழிலாளர் நிலைமை, மனித உழைப்பு

**50. கிறஸ்தவ ஒன்றிப்பு முக்கியமானதாய் அமைவதற்கான காரணம்**

1) கிறிஸ்தவம் உலகத்தின் பிரதான மதமாவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றமையாகும்
2) உலகில் திருச்சபையின் அதிகாரத்தை அதிகரிப்பதற்குக் காரணமாகின்றமையாகும்
3) திருச்சபையின் வளங்களின் வீண்விரயத்தை தவிப்பதற்காகும்
4) நற்செய்தி அறிவிப்பிற்கு ஒற்றுமையின்மை பெரும் தடையாகக் காணப்படுகின்றமையாகும்
5) திருச்சபையின் உரிமைகளைப் பாதுகாக்க உதவுகின்றமையாகும்.

புள்ளித்திட்டம்

கிறிஸ்தவநாகரிகம் 1

| | | | | |
|---|---|---|---|---|
| 1. 3 | 11. 4 | 21. 4 | 31. 4 | 41. 5 |
| 2. 2 | 12. 3 | 22. 5 | 32. 3 | 42. 4 |
| 3. 1 | 13. 2 | 23. 3 | 33. 5 | 43. 1 |
| 4. 5 | 14. 5 | 24. 2 | 34. 2 | 44. 2 |
| 5. 4 | 15. 1 | 25. 3 | 35. 4 | 45. 3 |
| 6. 5 | 16. 2 | 26. 3 | 36. 3 | 46. 1 |
| 7. 4 | 17. 3 | 27. 4 | 37. 5 | 47. 5 |
| 8. 3 | 18. 1 | 28. 5 | 38. 4 | 48. 4 |
| 9. 2 | 19. 3 | 29. 1 | 39. 2 | 49. 2 |
| 10. 1 | 20. 3 | 30. 2 | 40. 4 | 50. 4 |